# அவினாசிலிங்கம் உயர் கல்வி நிறுவனத்தில் ராஜம்மாள் தேவதாஸ் நினைவு சொற்பொழிவு

Afternoon,dt:9.4.26,,pg.no.3



கோவை, ஏப். 9

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில், டாக்டர் ராஜம்மாள் பி.தேவதாசின் 24வது ஆண்டு சொற்பொழிவு நிகழ்வு நடைபெற்றது. அவினாசிலிங்கம் நிறுவனத்தின் பதிவாளர் முனைவர் ஹை. இந்து வரவேற்புரை ஆற்றினார். டெல்லி, அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் (CSIR) தலைமை இயக்குநரும், DSIR செயலாளருமான டாக்டர் கலைச்செல்வி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு இந்த ஆண்டிற்கான சொற்பொழிவு விருதைப் பெற்று, சிறப்புரையாற்றினார்.

அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளையின் துணை அறங்காவலரும், முன்னாள் பதிவாளருமான முனைவர் கௌரி ராமகிருஷ்ணன் விருது பெற்றவர் மற்றும் முன்னதாக இவ்விருதைப் பெற்றவர்கள் பற்றிய விவரங்களை தெரிவித்தார். மேலும் அவினாசிலிங்கம் நிறுவனங்களின் வழிகாட்டியும் வடிவமைப்பாளருமான டாக்டர் ராஜம்மாள் பி. தேவதாஸின் 80வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், 1999ஆம் ஆண்டு அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை மற்றும் உயர்கல்வி நிறுவனத்தால் இந்த விருது நிறுவப்பட்டது.

மனையியல், ஊட்டச்சத்து, மருத்துவம் மற்றும் அதன் தொடர்புடைய அறிவியல் துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய வல்லுநர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கப்படுகிறது. இதுவரை 23 பேர் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

இதில் நிறுவனத்தின் வேந்தர் டாக்டர் தி.ச.க. மீனாட்சிசுந்தரம் தலைமைத் தாங்கி டாக்டர் ராஜம்மாள் பி.தேவதாஸின் நினைவுகளையும், நிறுவனத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய தொலைநோக்கு பங்களிப்புகளையும் நினைவு கூர்ந்தார். தொடர்ந்து அக்டோபர் 2026ல் அவினாசிலிங்கம் நிறுவனத்தில் நடைபெறவுள்ள இந்திய ஊட்டச் சத்து சங்கத்தின் 58வது ஆண்டு தேசிய மாநாட்டின் முதல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.